**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வகோட்டை**
**முன்னிலை:–திரு. நா. சிவபழனி, BA., BL.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வகோட்டை
2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7–ம் நாள் சனிக்கிழமை
2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் மாசி திங்கள் 23 ஆம் நாள்

**<u>அசல் வழக்கு எண்.40/2025</u>**

**1. ராஜேஸ்வரி,** வயது 54/2025
த/பெ. கோவிந்தபிள்ளை,
க/பெ.கோபாலன்,
எண். 1/51, காவாலிப்பட்டி,
திருவோணம்,
ஒரத்தநாடு தாலுகா,
தஞ்சாவூர் மாவட்டம்.

**2. சொர்ணவள்ளி**, வயது 51/2025
த/பெ. கோவிந்தபிள்ளை,
க/பெ.புண்ணியராசு,
எண்.246/1, காளகம்,
பேராவூரணி தாலுகா,
தஞ்சாவூர் மாவட்டம். .... வாதிகள்

//எதிராக//

**1. சந்திரராசன்**, வயது 70/2025,
த/பெ. தம்பி அய்யா பிள்ளை,
வலச்சேரிப்பட்டி,
வெள்ளாளவிடுதி வட்டம்,
கந்தர்வக்கோட்டை தாலுகா,
புதுக்கோட்டை மாவட்டம்.

**2. சூரியமூர்த்தி,** வயது 68/2025,
த/பெ. தம்பி அய்யா பிள்ளை,
வலச்சேரிப்பட்டி,
வெள்ளாளவிடுதி வட்டம்,
கந்தர்வக்கோட்டை தாலுகா,
புதுக்கோட்டை மாவட்டம்.

**3. திருஞானமூர்த்தி**, வயது 66/2025
த/பெ. தம்பி அய்யா பிள்ளை,
வலச்சேரிப்பட்டி,
வெள்ளாளவிடுதி வட்டம்,
கந்தர்வக்கோட்டை தாலுகா,
புதுக்கோட்டை மாவட்டம்.

**4. சார்பதிவாளர்,**
சார்பதிவாளர் அலுவலகம்,
கந்தர்வக்கோட்டை மற்றும் தாலுகா,
புதுக்கோட்டை மாவட்டம்.

**5. மாவட்ட பதிவாளர்,**
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
புதுக்கோட்டை.

**6. மாவட்ட ஆட்சித்தலைவர்,**
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
புதுக்கோட்டை. .... பிரதிவாதிகள்

வழக்கு சொத்து வாதிகள் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு மட்டுமே உரிமையுடையது என்று உரிமை விளம்பல் கோரியும், வழக்கு சொத்தில் வாதிகளின் குடும்பத்தாரின் அமைதியான அனுபவத்தை 1 முதல் 3 பிரதிவாதிகளோ அல்லது அவர் வகை ஆட்களோ எந்த வகையிலும் தடை செய்யக்கூடாதென நிரந்தர தடையாணை பரிகாரம் கோரியும், வழக்கு சொத்தை 1ஆம் பிரதிவாதிக்கு வாதிகளின் தகப்பனார் கோவிந்தபிள்ளை என்பவர் கடந்த 26.12.1990 ஆம் வருடம் எழுதிக்கொடுத்ததாக சொல்லும் ஆவண எண் 1311/1990 ஆரம்பம் முதலே இல்லாநிலையது என விளம்புகை செய்யக்கோரியும், வழக்கு சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகள் சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமனம் செய்து ஏற்படுத்தியுள்ள தார்சுவீடு, கட்டுமானங்களை அகற்றிக்கொள்ள 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கு செலவுத்தொகை கோரியும் வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

**வழக்கு தாக்கலான நாள்:** 14.08.2025 மற்றும் 21.08.2025

**வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்ட நாள்:** 21.08.2025

**வழக்கு மூலம்:**

வழக்கு சொத்தின் வாதிகள் இருந்த போது, அங்கு வந்த 1 முதல் 3 ஆம் பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் அத்து மீறி நுழைந்து, வழக்கு சொத்தில் வாதியின் அனுபவத்தை மறுத்து பேசி, ஆக்கிரமனம் செய்ய முற்பட்ட 01.03.2025 ஆம் தேதியன்று வழக்கு சொத்தில் வாதிகள் வில்லங்க சான்று வாங்கிப்பார்த்த 04.03.2025 ஆம் தேதியன்றும் மேலும் வழக்கு சொத்தை வாதிகள் அளவீடு செய்த 2025 மே மாதம் இரண்டாம் வாரத்திலும் புதுக்கோட்டை மாட்டம், கந்தர்வக்கோட்டை தாலுகா, வெள்ளாளவிடுதி கிராமத்திலும் உற்பத்தியாகியுள்ளது.

**நீதிமன்றக் கட்டணம்:–**

வாதிகள் கோரும் பரிகாரமான உரிமை விளம்பல் அதனை தொடர்ந்து நிரந்திர தடையாணை பரிகாரத்திற்காக வழக்கு சொத்தின் மொத்த மதிப்பு ரூ. 84,015/– இதில் பாதி ரூ.42,007/– இதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச்சட்டம் பிரிவு 25(b) இன் படி ரூ.1,260/– நீதிமன்ற கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.

வாதிகள் கோரும் 2வது பரிகாரமான விளம்புகை பரிகாரத்தை வாதிகள் உத்தேசமான ரூ.5,000/– என மதிப்பீட்டு அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச்சட்டம் பிரிவு 25(d) இன் படி ரூ.150/– நீதிமன்ற கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.

அதே போல் வாதிகள் கோரும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்தை உத்தேசமாக ரூ.1,000/– என மதிப்பிட்டு அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச்சட்டம் பிரிவு 27(c) இன் படி ரூ.30/– நீதிமன்ற கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச்சட்டம் பிரிவு 6(3)இன் படி கூடுதல் நீதிமன்ற கட்டணமாக ரூ.1,440/– செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கு இன்று 07.03.2026 என் முன்பாக விசாரணைக்காக வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.குலாம் தஸ்தாகீர்,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் திரு.R.M.ரெங்கசாமி,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 4 முதல் 6 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.K.செந்தில்குமார், B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும் இருந்த நிலையில், இவ்வழக்கு நீதிமன்றத்திற்கு வெளியே தீர்ந்துவிட்டதாகவும், எனவே, இவ்வழக்கினை மேல்நடத்தவில்லை என்றும் வாதி தரப்பில் ஒரு குறிப்பாணை தாக்கல் செய்து, பதிவு செய்யப்பட்டதன் அடிப்படையில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>தீர்ப்பாணை</u>

1. வாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார். இவ்வழக்கு நீதிமன்றத்திற்கு வெளியே தீர்க்கப்பட்டது என்றும் இவ்வழக்கு மேலும் வலியுறுத்தப்படவில்லை என்றும் வாதிகள் தரப்பில் ஒரு குறிப்பாணை தாக்கல் செய்து, அந்த குறிப்பாணை பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கு நீதிமன்றத்திற்கு வெளியே தீர்க்கப்பட்டது என தள்ளுபடி செய்யப்பட்டு, கட்டளையிட்டு தீர்ப்பாணைப் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2. **வழக்கின் செலவுத் தொகை பற்றி உத்தரவு ஏதும் இல்லை.**

<u>செலவுத்தொகை விவரம்</u>

(இருதரப்பிலும் செலவுத் தொகை பட்டியல் தாக்கல் செய்யவில்லை )

<u>சொத்து விபரம்</u>

புதுக்கோட்டை பதிவு மாவட்டம், கந்தர்வக்கோட்டை தாலுகா, வெள்ளாளவிடுதி கிராம புல எண் 155/11B விஸ்தீரணம் 0.17.0 ஏர்ஸ் புன்செய் நிலம் மற்றும் அதில் அமைந்துள்ள கட்டுமானங்கள் உட்பட (புதிய புல எண் 155/11B2)

இன்று 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 7–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.07 13:52:01 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**